## 3.23 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு மிதிவண்டியில் 2 சக்கரங்கள் உள்ளன எனில், 5 மிதிவண்டிகளில் எத்தனை சக்கரங்கள் இருக்கும்?

அ) 7 ஆ) 10 இ) 12 ஈ) 8

2. ஒரு மின்விசிறியில் 3 இறக்கைகள் உள்ளன எனில், 4 மின்விசிறிகளில் எத்தனை இறக்கைகள் இருக்கும்?

அ) 12 ஆ) 9 இ) 15 ஈ) 7

3. ஓர் ஆட்டிற்கு 4 கால்கள் உள்ளன எனில், 5 ஆடுகளுக்கு எத்தனை கால்கள் இருக்கும்?

அ) 18 ஆ) 24 இ) 16 ஈ) 20

4. ஒரு மகிழுந்தில் 5 பேர் அமர முடியும் எனில், 4 மகிழுந்துகளில் எத்தனை பேர் அமர முடியும்?

அ) 25 ஆ) 20 இ) 30 ஈ) 10

## 3.24 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு கோழிக்கு 2 கால்கள் உள்ளன எனில், 8 கோழிகளுக்கு எத்தனை கால்கள் இருக்கும்?

அ) 12 ஆ) 16 இ) 15 ஈ) 18

2. ஓர் *ஆட்டோவில்* 3 சக்கரங்கள் உள்ளன எனில், 9 *ஆட்டோக்களில்* எத்தனை சக்கரங்கள் இருக்கும்?

அ) 27 ஆ) 30 இ) 12 ஈ) 15

3. ஒரு கூர்மையாக்கியின் விலை ₹4 எனில், 7 கூர்மையாக்கிகளின் விலை என்ன?

அ) ₹14 ஆ) ₹20 இ) ₹24 ஈ) ₹28

4. ஒரு பெட்டியில் 5 *பென்சில்கள்* உள்ளன எனில், 8 பெட்டிகளில் எத்தனை *பென்சில்கள்* இருக்கும்?

அ) 25 ஆ) 40 இ) 35 ஈ) 30

LIVEWORKSHEETS